1993 ஏப்ரல் 27]

ஏறக்குறைய 12 கூர்நோக்கு இல்லங்கள் அரசின் நேரடிபொறுப்பில் இயக்கப்பட்டுக்கொண்டு வருகின்றன. ஆனால் கோவையில் இருக்கிற இல்லம் தனியாருடைய கூர்நோக்கு இல்லமாகும். அந்தக் கூர்நோர்க்கு இல்லத்திற்கும், எப்படி அரசு கூர்நோக்கு இல்லங்கள் குழந்தைகளைப் பாதுகாத்து வளர்க்கிறதோ அதைப்போல் வளர்ப்பதற்கு, எல்லா மானியங்களும் புரட்சித் தலைவி ஆட்சியிலே உயர்த்தித் தரப்பட்டு இருக்கிறது. அந்த மானியத்தைக் கொண்டு அவர்கள் அந்தக் கட்டடங்களின் நிர்வாகப்பொறுப்பை ஏற்றுகொண்டு செயல்படவேண்டும், அதில் ஏற்படுகிற குறைபாடுகளை சட்டமன்ற உறுப்பினர்கள் எழுப்பி, என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார்களேயானால் நிச்சயமாக அது தனியாருடைய இல்லங்களுக்குத் தெரிவிக்கப் பட்டு, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 497, திரு. தி. சாத்தையா, இருக்கையில் இல்லை.

வினா எண் 498, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

498—

சத்திரக்குடியில் ஆதிதிராவிட மாணவியர் விடுதி ஏற்படுத்தல்

*14587—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா.—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, சத்திரக் குடியில் ஆதிதிராவிட மாணவியர் விடுதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியத்தின் தலைமையிடமாக சத்திரக்குடி அமைந்துள்ளது. அங்குள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் 1,300 மாணவ, மாணவியர் படிக் கிறார்கள். இதில் கிட்டத்தட்ட 600-க்கு மேற்பட்டவர்கள் மாணவியர். ங்கே பேரூராட்சியைச் சேர்ந்த அதிக கிராமங்கள்

இந்த ஒன்றியத்தில் இருக்கின்றன. ஆதி திராவிட மக்கள் 50 விழுக்காடுக்கு மேல் சத்திரக்குடியைச் சுற்றி இருக்கிறார்கள். ஆகவே ஆதி திராவிட மக்கள் அதிகமாக வாழ்கிற, அதிகமான கிராமங்களைக் கொண்ட அதிக மாணவிகள் வாழ்கின்ற இந்த சத்திரக்குடியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாத்தியக்கூறு இருப்பின் வருகிற நிதியாண்டிலேயாவது அமைத்துத்தர ஆணையிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் சத்திரக் குடியில் போதிய வசதிகள் இருப்பின் இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே அமைச்சரிடம் இதுகுறித்து ஒரு மனு கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1993-94ஆம் ஆண்டு இந்த விடுதியை ஆரம்பித்துத் தரவேண்டும் என்றும், தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டு, அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மீண்டும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டு இதுபற்றி பரிசீலிக்கப் படும் என்பதைச் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 499, திரு. சி. சுவாமிநாதன் இருக்கையில் இல்லை. திரு. எஸ். சண்முக நாதன், மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

499—

வல்லநாட்டு செட்டியார் இனத்தவரை பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்.

* 16848.—திரு. சி. சுவாமிநாதன்:
மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புதுக்கோட்டை மாவட்டம், வல்லநாட்டு செட்டியார் களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS